திருமணம்
வாழ்வின் திருப்புமுனை

T.S.A. அபூதாஹிர் மஹ்லரி

வெளியீடு

பஹீமிய்யா பப்ளிஷர்ஸ்

திருமணம்

வாழ்வின்

திருப்புமுனை

மௌலவி, அல்ஹாஜ், அல்ஹாபிழ், அப்ளலுல் உலமா

T. S. A. செய்யிது அபூதாஹிர் மஹ்ழரீ

பாஜில் ஜமாலி, M. A.

(ஆசிரியர், அல்–அஸ்ரார் மாத இதழ்)

வெளியீடு:

ஃபஹீமிய்யா பப்ளிஷர்ஸ்

கான்காயே ஃபஹீமிய்யா

வள்ளலார் நகர், மாடம்பாக்கம் போஸ்ட்,

கூடுவாஞ்சேரி – 603 202.

போன்: 04114 – 267213

என்னுரை

சமுத்திரத்தின் ஆழத்திலே தான் அல்லாஹ் முத்துக்களை வைத்திருக்கிறான். அதன் அலைகளுக்குப் பயந்து யாரும், கடலுக்குள் செல்லாமல் இருப்பதில்லை. கடல் என்றால் அலை இருக்கத்தான் செய்யும். கடலை வேறாகவும், அதன் அலையை வேறாகவும் நினைத்து கரையிலேலேயே நின்று விட்டால், அவனுக்கு முத்தும் கிடைக்காது. சொத்தும் கிடைக்காது.

அது போலத்தான் திருமணமும், வாழ்வு என்றாலே சுக, துக்கம் நிறைந்ததுதான். அதைப்பயந்து கொண்டு திருமணத்தையே நிராகரிப்பது அறிவுடைமையாகாது.

வாழ்க்கைத் தேர்வில் தோற்று விட்ட யாரோ சிலர், தங்கள் கசப்பான அனுபவங்களை மக்கள் மத்தியிலே உலா வரவிட்டதன் விளைவு திருமணம் என்றாலே பின்னங்கால் பிடரியில்பட ஓடுகின்றனர்.

ஆனால், திருமண வாழ்வென்பது மனிதனை மனிதனாக வாழச் செய்யும் அறிய பாதையாகும். தெய்வீக வாழ்வுக்கும் கூட இது அடித்தளமிட்டுத்தரும் என்பதை உணர்த்த அல்–குர்ஆன் வல் ஹதீஸின் நிழலில் உருவானதே இந்நூல்.

இவ்விதழ் மலர துணை புரிந்தோர் யாவருக்கும் என் உள்ளார்ந்த நன்றிகள்.

தங்கள் அன்பின்
செய்யிது அபூதாஹிர் மஹ்ழரி
இப்னு
சுல்தான் அப்துல் காதிர் பக்ரி
காயல்பட்டணம்

திருமணம் வாழ்வின் திருப்பு முனை

நன்னெறி மார்க்கமாம் இஸ்லாத்தில் எத்தனையோ வணக்க வழி முறைகள் இருப்பது போன்று, திருமணமும் ஒரு வணக்கமேயாகும். ஆதி மனிதர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதல் அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரை எல்லா நபிகளாலும் முறைப்படுத்தப்பட்டு வந்த இரண்டே அம்சங்கள்,

1) ஈமான் 2) திருமணம்.

அல்லாஹ் குர்ஆன் ஷரீபில்

وَلَقَدْ اَرْسَلْنَا رُسُلاً مِنْ قَبْلِكَ وَجَعَلْنَا لَهُمْ اَزْوَاجًا وَّذُرِّيَةً

(நபியே) உங்களுக்கு முன் பல ரசூல் மார்களை அனுப்பியிருந்தோம். மேலும் அவர்களுக்கு மனைவி மக்களையும் அளித்திருந்தோம். என்றுரைக்கிறான்.

அதைத்தான் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும்,

اَلنِّكَاحُ مِنْ سُنَّتِيْ وَسُنَّةُ الأَنْبِيَاءِ مِنْ قَبْلِي

திருமணம் எனது வழிமுறையும் எனக்கு முந்திய நபிமார்களின் வழிமுறையுமாகும் என்றார்கள்.

திருமணத்தின் அவசியத்தை வலியுறுத்தும் முகமாக அருள் மறையின் திரு வசனம் அறிவுறுத்துகிறது.

وَأَنْكِحُوْا الأَيَامَى مِنْكُمْ وَالصَّالِحِيْنَ مِنْ عِبَادِكُمْ وَاِمَائِكُمْ ۚ اِنْ يَكُوْنُوْا فُقَرَاءَ يُغْنِهِمِ اللّٰهُ مِنْ فَضْلِه وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ

இன்னும், உங்களில் எவருக்கும் வாழ்க்கைத்துணை இல்லாவிட்டால் அவர்களுக்கு(விதவைகளுக்கு)ம் திருமணம் செய்து வையுங்கள். உங்கள் அடிமைகளில் உள்ள நல்லோர்கள் ஆணாயினும், பெண்ணாயினும் அவர்களுக்கும் திருமணம் செய்து வையுங்கள்.

அவர்கள் ஏழைகளாக இருந்தாலும் அல்லாஹ் தன்னுடைய அருளைக் கொண்டு அவர்களை தேவையற்றவர்களாக்குவான். அல்லாஹ் விசாலமானவனும், அறிந்தவனுமாக இருக்கிறான். (அந்நூர் - 32)

மேற்கண்ட திருவசனத்தை மீண்டும் படித்துப்பாருங்கள்.

நம்மில் எழும் ஏராளமான வினாக்களுக்கு சரியான விடையாக அமைந்திருப்பதைக் காண முடியும்.

மேற்கண்ட வசனத்தின் வழியே அல்லாஹ் திருமணத்தை வலியுறுத்துகிறான். அடிமைகள், வசதியற்ற ஏழைகள் என்பதையெல்லாம் காரணம் கூறி மணபந்தம் ஒத்தி வைக்கப்படக் கூடாது, மாறாக அவர்களுக்கும் மணமுடித்து வைக்க வேண்டும், ஏழ்மையை போக்கி அவர்களுக்கு செழுமை தருவது தன் பொருப்பு என்பதாக இறைவன் இயம்புகிறான்.

இந்த திருவசனம் 'அந்நூர்' என்ற அத்தியாயத்தில் உள்ளதாகும். இந்த அத்தியாயத்தின் துவக்கத்திலிருந்தே இறைவன் விபச்சாரத்தைப் பற்றியும் அதற்குரிய குற்றப் பரிகாரங்களைப் பற்றியும் கூறி வருகிறான். அதன் தொடரிலேயே திருமணத்தின் அவசியத்தை அல்லாஹ் அறிமுகப்படுத்துவதன் மூலம் விபச்சாரம் எனும் மானங்கெட்டச் செயலை விட்டும் மனிதனைக் காக்கும் மருந்தாக மண வாழ்க்கையை தேர்ந்தெடுக்கச் சொல்கிறான்.

இன்று உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொடிய உயிர் கொல்லி நோயான 'எய்ட்ஸ்' எனும் பேரிழிவு நோயை விட்டும் காப்பதற்காக அரசின் சார்பில் பலகோடிகள் செலவு செய்யப்படுகிறது. எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பிரச்சாரம், பிரசுரங்கள், வானொலி, தொலைகாட்சிகளில், வாகனங்களில் விளம்பரங்கள், தெரு முனைகளில், முக்கிய நகரங்களின் பிரதான வீதிகளில், சந்திப்புகளில் வைக்கப்படும் அறிவிப்புப் பலகைகள் என ஏராளமான வழிகளில் 'எய்ட்ஸ்' பற்றிய எச்சரிக்கைகள் செய்யப்பட்டு வந்தாலும், அவைகளெல்லாம் அவைகளெல்லாம் விழலுக்கு இறைத்த நீர் போலத்தான் ஆகி வருகிறது.

எனவேதான் இஸ்லாம் நிரந்தரத் தீர்வாகவும், சரியான முடிவாகவும் திருமணத்தை முறைப்படுத்தச் சொல்கிறது.

ஒழுங்கு முறையான ஒழுக்க வாழ்வுநெறியின் ஔடதமாக திருமணத்தை முன் வைக்கிறது, அதைப்பறை சாற்றும் விதமாக பூமான் நபியின் பொன் மொழி இவ்வாறு விவரிக்கிறது.

يَا مَعْشَرَ الشَّبَابِ مَنِ اسْتَطَاعَ مِنْكُمُ الْبَاءَةَ فَلْيَتَزَوَّجْ
فَإِنَّهُ أَغَضُّ لِلْبَصَرِ وَأَحْصَنُ لِلْفَرْجِ وَمَنْ لَمْ يَسْتَطِعْ
فَعَلَيْهِ بِالصَّوْمِ فَإِنَّهُ لَهُ وِجَاءٌ

ஓ! இளைஞர்களே உங்களில் தாம்பத்தியம் நடத்த சக்தி பெற்றோர் திருமணம் செய்து கொள்ளட்டும். ஏனெனில், அது(தகாத) பார்வையை கட்டுப்படுத்தும் கற்பைக் காக்கும் (அதற்கு) இயலாதோர் நோன்பு நோற்றுக் கொள்ளட்டும்.

ஏனெனில், நோன்பு (ஆசையைக்) கட்டுப்படுத்தக் கூடியதாகும்.

அறிவிப்பாளர் - அப்துல்லாஹ் பின் மஸ்வூத் ரலியல்லாஹு அன்ஹு நூல் - புகாரி ஷரீப் 5066 -முஸ்லிம் ஷரீப் 2710.

நிம்மதி

மனித வாழ்க்கையில் எளிதில் கிடைப்பதற்கரிய ஒரு பொருள் நிம்மதி. இதைப்பெறுவதற்காக பலரும் பல வகைகளில்

முயற்சிக்கின்றனர். சிலர் கடலோரங்களில் சென்று காற்றுவாங்குவர், சிலர் பூங்காக்களில் சென்று பூக்களின் ஸ்பரிசங்களில் நேரத்தை செலவிடுவர், இன்னும் சிலரோ திரையரங்குகள், சர்க்கஸ் போன்ற இடங்களுக்குச் செல்வர். இவைகளை யெல்லாம் விட மேலாக தூக்கத்திற்காக மருந்து, மாத்திரைகள் சாப்பிட்டும், ஊசி போட்டும் கூட தூக்கத்தையும், அதன் மூலம் நிம்மதியையும் வரவழைக்க நினைக்கின்றனர்.

ஆனால் அவைகளே கூட சில சமயங்களில் மன அமைதியை ரணப்படுத்தி தூக்கத்திற்கு மாறாக துக்கத்தையே அழைத்து வருவதும் உண்டு.

இவைகளையெல்லாம் ஆய்வு செய்தால் மனிதனின் இயந்திர வாழ்க்கை காலையில் விழித்தது முதல் இரவு படுக்கைக்கு செல்லும் வரை டென்சன், டென்சன்.

காலையிலே அலுவலகம் செல்ல வேண்டுமென்ற டென்சன் மாலையில் அலுவலகத்திலிருந்து வந்த டென்சன். இதற்கிடையில் சாலையில் வாகன நெரிசல்களால் டென்சன். இப்படியாக ஒரு மனிதன் அமைதியைத் தேடி வீட்டிற்கு வரும் போது அங்கே அவனை அன்பொழுக வரவேற்று, சிரித்த முகத்தால் அவனுக்கு சீதனம் கொடுத்து வாசலிலே நின்று வரவேற்கிறபோது அவனின் வேகமும், கோபமும் தணிகிறது. இங்கே தான் இல்வாழ்வின் துணை அவசியப்படுகிறது.

அலுவலகத்தில் தனக்கு நேர்ந்த பிரச்சனைகளை தன் மனைவியிடம் கூறும் போது, அவனது தலைபாரம் இறங்கியது போன்ற சுக உணர்வு உருவாகிறது, நாளை அலுவலகத்திலே தான் செய்ய வேண்டிய பணியைப் பற்றி சிந்திக்கும் விதத்தில்

சிந்தனை சீர் பெறுகிறது.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மனைவி தன் கணவனுக்கு நேர்ந்த பிரச்சனைக்கு ஒத்தடம் கொடுக்கிறாள், அன்பு மெழுகிய ஆறுதல் வார்த்தைகளால் அவனை அமைதி படுத்துகிறாள். நாளை செய்ய வேண்டிய பணிக்கு நல்ல ஆலோசனைச் சொல்கிறாள்.

மொத்தத்தில் தன் சுமைகளை பகிர்ந்து கொள்ள ஒரு வடிகாலாக அமைகிறாள், அங்கே தான் அமைதி பிறக்கிறது, அதுதான் நிம்மதி என்ற நிஜம் உருவம் பெறுகிறது. அந்த நிம்மதியைத்தரும் அழகு சாதனமாகத்தான் அல்லாஹ் திருமணத்தை அறிமுகப்படுத்துகிறான்.

وَمِنْ آيَاتِهِ اَنْ خَلَقَ لَكُمْ مِّنْ اَنْفُسِكُمْ أَزْوَاجًا لِتَسْكُنُوْا
اِلَيْهَا وَجَعَلَ بَيْنَكُمْ مَوَدَّةً وَرَحْمَةً ط

உங்களிலிருந்தே உங்கள் ஜோடிகளை நீங்கள் அவர்களின் மூலம் நிம்மதி பெறுவதற்காக அவன் படைத்திருப்பதும், இன்னும் உங்களுக்கிடையே பாசத்தையும் அன்பையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். (அர்ரூம் 21)

இறைவன் வழங்கிய நிம்மதியின் சாதனத்தை நிராகரிப்பது நிச்சயம் அறிவுடமை ஆகாது எனவேதான் இஸ்லாம் துறவறத்தை வெறுக்கிறது.

துறவறம்

மனித வாழ்வின் உயரிய நோக்கத்திற்காக அமுல்படுத்தப்பட்ட திருமணத்தை வெறுமனே உடல் இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதன் சாதனம் என்ற குறுகிய வட்டத்தில் சிந்திப்போர், தன் உடல் இச்சைகள் தீர்ந்த பின் என்னடா இது வாழ்கை என்று அலுத்துக் கொள்கின்றனர்.

பின்னர் துறவி, சன்னியாசி என்று பெயரிட்டுக் கொண்டு மண வாழ்க்கைக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று அறிவித்து விடுகின்றனர்.

இது துறவறமும் இல்லை. இப்படியொரு பிரம்மச்சர வாழ்க்கையை இஸ்லாம் அனுமதிக்கவும் இல்லை.

ஏனெனில் திருமணம் என்பதும், மனைவி, கணவனிடையே அன்பு, பாசம் என்பதும் வெறும் சடங்கல்ல. மாறாக இறைவனால் ஏற்படுத்தப்பட்ட அவனது அற்புதங்களும், அத்தாட்சிகளும் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாகும் என்பதை மேற்கண்ட திருவசனமே திருவுளமாகிறது.

திருமணமும் - ஆன்மீகமும்

இஸ்லாத்தில் துறவறம் இல்லை. ஆனால் ஆன்மீக வாழ்வு உண்டு. அதாவது மனிதரிடையே கலந்திருந்தாலும், தாமரை இலை தண்ணீரைப் போல, மாதுளைப்பழ முத்துக்களைப் போல, ஒட்டியும், ஒட்டாமலும் பட்டும் படாமலும் வாழும் மோன வாழ்க்கைக்கு 'ஆன்மீகம்' என்றழைக்கப்படும்.

அதுவெல்லாம் உலகம் நித்தியமற்றது, உலகிற்காக நாம் படைக்கப்படவில்லை, நமக்காகவே உலகம் படைக்கப்

பட்டிருக்கிறது, எனவே உலகே சதம் என்றெண்ணி அதன் மாயையில் மூழ்கி நிஜமான, நிரந்தரமான வாழ்வில் தோற்று விடக்கூடாது என்பதை எச்சரித்து உணர்வூட்டும் அம்சங்களாகும். ஆனால், இஸ்லாமிய ஆன்மீகம் (சூபிசம்) என்பது திருமண வாழ்க்கைக்கு எதிரானது என்ற முரணான வாதம் முன் வைக்கப்படுகிறது.

உண்மையில் இது அர்த்தமற்ற வாதமாகும். 'சூபிசம்' என்பது மனித வாழ்வில் பவித்திரமான பக்தி நிலைக்கு வழிகாட்டும் அம்சமே தவிர்த்து மண வாழ்க்கை, வணிகம், கொடுக்கல் வாங்கல் இவைகளுக்கு எதிரானதல்ல.

மாறாக மனித வாழ்வின் அடிப்படை அம்சங்களை இயல்பு நிலையான செயல்பாடுகளில் எதையும் குறை வைக்கக்கூடாது என்பதே இதன் உண்மையான தத்துவம். அதே நேரத்தில் மனிதன் தன் அன்றாடப்பணிகள் எதுவும் முடங்கி விடக்கூடாது என்பதிலும், அதே பணிகளில் அகத்தூய்மையான மாக மருவற்ற சுகந்த சூழலை[2] நிறுவுவதே சூபிசத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

மனிதன் எந்தப்பணியில் ஈடுபட்டிருந்தாலும் அவனது சிந்தனையின் கூர்முனை தன் மூலப் பொருளில் இருக்க வேண்டும். அந்தப் பரம் பொருள் மீது கவனம் வைத்திருந்தால் தான் மனிதப்படைப்பின் நோக்கத்தை அறியவும் அதை அடையவும் முடியும். அதுதான் சூபிசத்தின் சுகந்த சித்தாந்தமாகும்.

அதுவன்றி திருமணமே முடிக்காமல் வெறுமனே துறவறம் பூணுதல் என்பது இஸ்லாத்தில் அங்கீகரிக்கப்படாதது என்பதை பின்வரும் நிகழ்வின் வழியே நிதர்சனமாக அறிய முடியும்.

*1மூன்று ஸஹாபிகள் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவியரின் வீடுகளுக்கு சென்று, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வணக்க வழிபாடுகளைக் குறித்து வினவினர்.

*அதுபற்றி அவர்களுக்கு தெரிவிக்கப்பட்ட போது அவர்கள், தங்களின் வணக்க வழிபாட்டை குறைவாக நினைத்து, முன் (னோர்), பின் (னோர்) பாவங்கள் மன்னிக்கப்பட்ட மாநபி அவர்கள் எங்கே? நாம் எங்கே? எனப் பேசிக் கொண்டனர்.

அவர்களில் ஒருவர், நான் இனிமேல் இரவு முழுவதும் தொழுது கொண்டே இருப்பேன் என்றார். இன்னொருவர் நான் காலமெல்லாம் நோன்பு வைக்கப் போகிறேன் என்றார். மற்றொருவர் நான் பெண்களை விட்டும் ஒதுங்கியிருக்கப் போகிறேன். ஒருபோதும் மணமுடித்துக் கொள்ள மாட்டேன் என்றார்கள்.

அவ்வமயம் அங்கே வந்த அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், (அவர்களிடம்) இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருந்தது நீங்கள்தானே? என்று வினவினார்கள்.

அறிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் உங்களை விட அல்லாஹ்வை அஞ்சுபவன் ஆவேன். அல்லாஹ்வை பயந்து நடப்பவன் ஆவேன் எனினும் நான்

---

*1 அந்த மூவர், அலீபின் அபீதாலிப், அப்துல்லாஹ்பின் அம்ரு, உதுமான் பின் மழ்ஊன் ரலியல்லாஹு அன்ஹும் ஆகிய மூவரே என இமாம் இப்னுஹஜருல் அஸ்கலானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஃபத்ஹுல் பாரியில் கூறுகிறார்கள்.

நோன்பு நோற்கிறேன், விட்டு விடவும் செய்கிறேன். தொழுகவும் செய்கிறேன், உறங்கவும் செய்கிறேன். நான் பெண்களை மணமுடித்தும் உள்ளேன். எனவே யார் என் வழிமுறையை (சுன்னத்தை) விடுகிறாரோ அவர் என்னைச் சார்ந்தவர் இல்லை, என்றார்.

அறிவிப்பாளர் - அனஸ் ரலியல்லாஹு அன்ஹு

நூல் - புகாரி ஷரீப் 5063

சிந்தனையைத்தூண்டும் மேற்கண்ட நிகழ்வின் மூலம் பல்வேறு உண்மைகளை உணர முடிகிறது.

நோன்பைப்பற்றியும், இரவுத் தொழுகையைப் பற்றியும் அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளிய பொன்மொழிகள் கிரந்தங்களில் ஏராளமாகவும்,

---

***2 திருமறையின் (111-2) வசனத்தை வைத்து, மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன், பின் பாவங்கள் மன்னிக்கப்பட்டதாக எல்லோரும் பேசி வருகின்றனர், ஆனால் அதே வசனத்தின் விவுரையில் அல்லாமா அஹ்மது ரிழாகான் (அஃலா ஹழ்ரத்) ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், தமது 'கன்ஜுல் ஈமான்' எனும் தப்சீரில்**

تاکہ اللہ تمہارے سبب سے گناہ بخشے تمہارے اگلوں کے اور تمہارے پچھلوں کے

(நாயகமே) உங்களுக்காக, அல்லாஹ் உங்களின் முன்னோர், பின்னோர் யாவரின் பாவங்களையும் மன்னித்து விட்டான், என்பதுதான் சரியாகும் என்றுரைக்கிறார்கள்.

தாராளமாகவும் காணக்கிடைக்கிறது. நோன்பையும், இரவுத் தொழுகையையும் வலியுறுத்திய நபியவர்கள் தான் அதற்கும் ஒரு ஒழுங்கு முறையை வகுத்தார்கள், தாமும் திருமணம் செய்து திருமணம் செய்ய ஏவியும் இருக்கிறார்கள்.

எனவே இஸ்லாம் என்பதை தொழுகை, நோன்பு என்பது தான் என்ற குறுகிய வட்டத்தில் அடைக்காமல், மணமுடிப்பது, மனைவி, மக்களுடன் மகிழ்ந்திருப்பது போன்ற இன்னும் பல இனிய அம்சங்களையும் உள்ளடக்கியது என்ற உண்மையையும் விளங்க வேண்டும்.

எனவே, இஸ்லாத்தில் திருமணம் என்பது வேறு ஆன்மீகம் என்பது வேறல்ல. சுருங்கக் கூறின் ஆன்மீகம் (சூபிசம்) எதைவிட்டும் பிரிந்திருக்காது, எதுவோடும் இணைந்திருக்காது.

ஹலால், ஹராம் என்ற வரம்புகளுக்குட்பட்டு செய்யப்படுகிற ஒவ்வொரு செயலிலும் ஆன்மீகம் துளிர்விடும்.

வலீமார்கள்

அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருள் வழித் தோன்றல்களான அருமை ஸஹாபிகள் தொடுத்து வந்த சன்மார்க்க சீலர்களான வலிமார்கள் மணமுடிக்காமலோ, மழலைகளைப் பெற்றெடுக்காமலோ இருக்கவில்லை.

மாதவர்க்கரசர், வலிகள் கோமான், ஈமானுக்கு ஜீவனளித்த சீமான், நம் கல்பில் நிறைந்த கௌதுல் அஃழம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நான்கு மனைவியரை மணமுடித்து நாற்பத்தி ஒன்பது

குழந்தைகளைப் பெற்றெடுத்திருக்கிறார்கள்.

இறைநேசர்களுக்கரசரான எஜமான் குத்பு நாயகம் அவர்களின் மணவாழ்க்கை அவர்களின் ஆன்ம நேயப் பாதையில் சற்றும் இடையூறு செய்திடவில்லை.

மேலும் மஹான் அவர்கள் சிறந்த வணிகராகவும், பெரும் செல்வந்தராகவும் திகழ்ந்திருக்கிறார்கள்.

மேதகு ஞானி முஹ்யித்தீன் இப்னுல் அரபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பலநூறு பணியாளர்களைக் கொண்டு பல தொழில் ஸ்தாபனங்களை லாபகரமாக நடத்தி வந்திருக்கிறார்கள்.

இமாம் அபூஹனீபா ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சிறந்த ஜவுளி வணிகராக இருந்தார்கள்.

இத்தகைய மேன் மக்களின் மோனப் பாதையில் திருமணம் தடையாக இருக்கவில்லை என்பதையும் நினைவில் நிறுத்த வேண்டும்.

தீனில் பாதி

عَنْ أَنَسٍ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ: إِذَا تَزَوَّجَ الْعَبْدُ فَقَدِ اسْتَكْمَلَ نِصْفَ الدِّيْنِ فَلْيَتَّقِ اللّٰهَ فِي النِّصْفِ الْبَاقِيْ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்

ஒரு அடியான் திருமணம் முடித்தால் மார்க்கத்தில் ஒரு பகுதியை பூரணமாக்கி விட்டான். எஞ்சிய பகுதியை இறையச்சத்தைக் கொண்டு நிறைவு செய்யட்டும்.

அறிவிப்பாளர் : அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்

நூல் - மிஷ்காத்.

இந்த ஹதீஸின் வழியே ஒரு மனிதன் திருமணத்திற்கு முந்திய வணக்க வழிபாடுகளை விட திருமணத்திற்கு பிந்திய செயல்கள் வலுவுள்ளதாக அமையும் என்பதை அறிய முடிகிறது.

திருமணம் பற்றி திரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மணிமொழிகள்

திருமணத்தின் அவசியத்தையும் அகமியத்தையும் அறிந்தோம். இனி அதில் பேணப்பட வேண்டிய ஒழுங்கு முறைகளைக் காண்போம்.

பெண் பேசுதல்

நமது சமூகத்தில், ஒரு ஆண் ஒரு பெண்ணை மணமுடிக்க கேட்டு அனுப்புகிற போது, அதே பெண்ணையே பிறிதொரு ஆணுக்காக கேட்பதும், அது போலவே ஒரு பெண்ணுக்காக பேசப்பட்ட ஆணை பிறிதொரு பெண்ணிற்கு கேட்பதும் நடைமுறையில் இருந்து வருகிறது.

அதில் தான் கேட்கும் பெண்பிள்ளைக்குத்தான் அந்த ஆண் அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் வரதட்சனை, சீர், வாகனம், போன்றவைகளில் பேரங்கள் பேசப்படுவதும் தாராளமாக காணமுடிகிற விந்தையாகும். இது குறித்த பெருமானின் பொன்மொழி இதோ!

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا عَنِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: لاَ يَبْعَ بَعْضُكُمْ عَلَى بَيْعِ بَعْضٍ وَلاَ يَخْطُبُ بَعْضُكُمْ عَلَى خِطْبَةِ بَعْضٍ

உங்களில் ஒருவர் வியாபாரம் செய்யும் போது, மற்றவர் (தலையிட்டு) வியாபாரம் செய்ய வேண்டாம்.

உங்களில் ஒருவர் பெண் பேசும் போது, மற்றவர் (குறுக்கிட்டு) பெண் பேச வேண்டாம்.

அறிவிப்பாளர் - இபுனு உமர் ரலியல்லாஹு அன்ஹுமா

நூல் - முஸ்லிம் ஷரீப் 2758 புகாரிஷரீப் 5142

மணப்பெண்ணைப் பார்ப்பது

நான் ஒருமுறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருகில் இருந்தேன். அப்போது அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, தாம் அன்சாரிகளில் (மதீனாவாசிகளில்) ஒரு பெண்ணை மண முடிக்கப் போவதாக தெரிவித்தார். அவரிடம் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், நீர் அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டீரா? என்று

கேட்டார்கள். அதற்கு அவர் 'இல்லை' என்றார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவ்வாறாயின் நீர் சென்று அவளைப் பாருங்கள் என்றார்கள்.

இன்றைய சமூகத்தில் பெரும் பாலும் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் தான் நடை பெறுகின்றன. அவற்றில் சில மணமகனிடமோ, மண மகளிடமோ விருப்பம் கேட்காமலேயே நிச்சயிக்கப்படுகிறது. நிச்சயத்திற்கு பிறகு கூட ஒருவரையொருவர் பார்ப்பதற்கு அனுமதிப்பதில்லை. மட்டுமின்றி அப்படிப்பார்ப்பது ஹராம் போன்று பேசி தடுத்து விடுகிறார்கள்.

அதன் விளைவு, திருமணத்திற்குப்பின் மணமக்களின் எதிர்பார்ப்புகளில் ஏற்பட்ட ஏமாற்றத்தால் அவர்களின் உறவுகள் முதல் தினத்திலேயே முறிந்து போன சோக சம்பவங்களும் ஏற்படாமல் இல்லை. இவைகளைத் தவிர்க்க மணமக்களிடம் ஒப்புதல் பெறுவது இக்காலத்தில் அவசரமும், அவசியமும் ஆகும்.

மேலும், பெற்றோர்கள் தம் மக்களுக்கு ஏற்ற மணமகனையோ, மணமகளையோ தேடுகிறபோது, ஒருமுக சிந்தனையின்றி, தூரநோக்கு சிந்தனையுடனும், மார்க்கம் அனுமதித்த வகையில் மணப் பொருத்தம் (குஃப்வு) பார்ப்பதும் அவசியமாகும்.

அதுவன்றி சில ஊர்களில் நடை பெறுவது போன்று, மண உறவுகள் (சம்பந்தம்) தம் ஊருக்குள்ளேயே இருக்க வேண்டும், அதுவும் தம் குடும்பத்திற்குள்ளேயே இருக்க வேண்டும். என்பதெல்லாம் அவரவர்களும் வகுத்துக் கொண்ட தனியார் சட்டங்களே அல்லாது மார்க்கம் வகுத்த நியதியோ, 'பந்தனையோ அல்ல.

எனவே மணப்பெண்ணை திருமணத்திற்கு முன் மணமகன் பார்க்க அனுமதிக்க வேண்டும். அதிலும் அவசியம் பேண வேண்டிய ஒன்று என்னவெனில், மேற்கண்ட ஹதீஸில் கூறப்பட்ட பிரகாரம் ஒரு பெண்ணை மணமுடிப்பதாக முடிவு செய்தால்தான் அப்பெண்ணைப் பார்க்கலாமேயல்லாது, ஒவ்வொரு பெண்ணாக பார்ப்பதும், தனக்கு பிடிக்கவில்லையென அதிருப்தி தெரிவிப்பதும் கூடாது.

இதன் மூலம் அப்பெண்ணுக்கு ஏற்படவிருக்கும் அடுத்த சம்பந்தம் பாதிக்கப்படலாம். முன்னர் பார்த்த மண வீட்டார் ஏன் வேண்டாம் என்றார்களோ? என்னக் குறையோ? என்பன போன்ற தவறான யூகங்களுக்கும் வழி வகுத்து விடும்.

நான்கு காரணங்கள்

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: تُنْكَحُ الْمَرْأَةُ لأَرْبَعٍ لِمَالِهَا وَلِحَسَبِهَا وَجَمَالِهَا وَلِدِيْنِهَا فَاظْفَرْ بِذَاتِ الدِّيْنِ تَرِبَتْ يَدَاكَ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்.

நான்கு காரணங்களுக்காக ஒரு பெண் மணமுடிக்கப்படுகிறாள்.

1) அவளது செல்வத்திற்காக 2) அவளது

குடும்பத்திற்காக 3) அவளது அழகிற்காக 4) அவளது மார்க்க(நல்லொழுக்க)த்திற்காக.

ஆகவே மார்க்க (நல்லொழுக்க)ம் உடையவளை (மணந்து) வெற்றி அடைந்துகொள்! (இல்லையேல்) உன் இரு கரங்களும் மண்ணாகட்டும்.

அறிவிப்பாளர் - அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு
நூல் - புகாரி ஷரீப் 5090

மணவிழா

عَنْ عَائِشَةَ رَضِيَ اللّٰهُ عَنْهَا قَالَتْ قَـــالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ: أَعْلِنُوْا هٰذَا النِّكَاحَ وَاجْعَلُوْهُ فِي الْمَسَاجِدِ وَاضْرِبُوْا عَلَيْهِ بِالدُّفُوْفِ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்

திருமணத்தை அறிவியுங்கள். அதை பள்ளியில் நடத்துங்கள். தஃப் எனும் (கஞ்சிரா) அடியுங்கள்.

(நூல் - திர்மிதி 1090)

திருமணம் என்னும் சுன்னத்தான அந்தநற் செயலில் பலரும் பங்கேற்றால் வந்தவர்களின் துஆக்களும் மணமக்களுக்கு கிடைக்கும். மேலும் இன்னின்னவர்கள்

கணவன் - மனைவி என்ற உறவுகள் தெரியவரும். அதன் வழியே தவறான யூகங்கள் தவிர்க்கப்படலாம். மேலும் குடும்பத்தினரை நேரில் சென்று சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது. அதன் வழியே குடும்பத்தில் நடந்து வந்த சிறு மோதல்களும் பழைய பகைமைகளும் மங்கி மேவிவிடுகிறது எனவே தான் அறிவிப்பு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

தற்போது மணவிழா அறிவிப்பு அழைப்பிதழ் விதவிதமாக விரியத் தொடங்கி விட்டது. படித்து விட்டு போட்டு விடுகிற இந்த அழைப்பிதழுக்காக பல்லாயிரம் செலவிட்டு பல வகைகளிலும் பணம் விரயம் செய்யப்படுகிறது.

பள்ளிவாசலில் வைத்து நடத்துங்கள் என்பதன் மூலம் இறையருள் இலங்கும் தலங்களில் இது போன்ற நிகழ்வுகள் நடைபெறுவதன் மூலம் மணமக்கள் சோபனம் பெறலாம், வானவர்களின் துஆக்களும் உண்டாகும்.

சில இடங்களில் மட்டுமே பள்ளிவாசலில் திருமணத்தை நடத்தி விட்டு மண்டபங்களில் விருந்து வைபவத்தை நடத்துகிறார்கள். இது ஏனைய பகுதிகளிலும் கடைபிடித் தொழுவதற்கு தகுந்த முன் மாதிரியாகும்.

தஃப் கஞ்சிரா

திருமணத்தில் தஃப் அடிப்பதை பல்வேறு ஹதீஸ்களின் மூலம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றுள்ளார்கள். ஆனால் சமீபத்தில் வந்த சில கு(பு)ழுக்கள்

சீர்திருத்தம் செய்கிறோம் என்ற பெயரில் இது போன்ற நல்ல வழிமுறைகளையும் தடுத்து அருகிப்போகச் செய்து விட்டார்கள். அவைகளை வழமையில் கொண்டுவர வேண்டும்.

ருபைய்யிஃபின்த் முஅவ்வித் ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் காலித்பின் தக்வான் அவர்களிடம் கூறினார்கள்.

எனக்கு திருமணமான அன்று (காலை) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் (எங்கள் வீட்டுக்கு) வந்தார்கள். எனக்கருகில் நீங்கள் அமர்ந்திருப்பது போல் அமர்ந்தார்கள் (அங்கு) சில சிறுமியர் கஞ்சிராக்களை (தஃப்) அடித்துக் கொண்டு பத்ருப் போரில் கொல்லப்பட்ட எம் முன்னோரைப்புகழ்ந்து (இரங்கல்) பாடிக் கொண்டிருந்தார்கள்.

*3நூல் - புகாரி ஷரீப் 5147

இந்த ஹதீஸின் வழியே திருமணத்தில் தஃப் (கஞ்சிரா) அடிக்கலாம் அழகிய பாடல்களை பாடலாம் என்பதை அறிய முடிகிறது.

செலவு

---

*3இந்த ஹதீஸின் தொடர் உள்ளது. எனினும் இங்கு அவசியம் இல்லை என்பதால் அதை விட்டிருக்கிறோம். வஹ்ஹாபிகள் இது குறித்து வாதம் செய்வார்களானால் அதன் விரிவான விவரம் நாம் முன்னர் எழுதிய மாநபியின் மவ்லிது ஷரீப் மார்க்கத்திற்கு அரணா? முரணா? என்ற நூலின் 122 ம் பக்கத்தில் உள்ளது. பார்க்கவும்.

இப்போதுள்ள நடைமுறையில் திருமணம் என்பது சிறிய அளவில் நடத்துவதானல் கூட, சராசரியான ஒரு நடத்தர குடும்பத் திருமணமே பல லட்சங்களை விழுங்கி விடுகிறது.

குறைவான செலவில், அவசியச் செலவுகளை மட்டும் செலவு செய்து மணமுடித்தால் ஊரார்களின் வசைச்சொல் அந்தக் குடும்பத்திற்கே ஒரு புதிய பட்டத்தை வாங்கித் தந்துவிடும். இதற்கு பயந்தே சில குடும்பங்கள் கடனுக்கு உட்பட்டும் மணவிழா நடத்துகின்றனர். அதிலே மனமும் இல்லை மணமும் இல்லை.

இது நடத்தர வர்க்கத்தின் செலவு. செல்வந்தர்களின் செலவோ, வார்த்தைகளால் வடிக்க முடியாது. எனவே விடுகிறேன் அவர்களெல்லாம் உணர்ந்துகொள்ள ஒரு ஹதீஸை மட்டுமே ஞாபகப்படுத்துகிறேன்.

نْ عَائِشَةَ رَضِيَ اللّٰهُ عَنْهَا قَالَتْ قَالَ رَسُوْلُ
لّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ: إِنَّ أَعْظَمَ النِّكَاحِ
كَةً اَيْسَرُهُ مُؤْنَةً

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்

குறைந்த செலவுகளோடு நடைபெறும் திருமணமே அருள்வளம் நிறைந்தது.

பல லட்சங்கள் செலவு செய்து பல ஹராம்களுக்கு மத்தியில் ஒரு சுன்னத்தான திருமணத்தை நடத்துபவர்கள், தங்களின் திருமண செலவை சுருக்கி பல குமர்களின் திருமண வாழ்விற்கு உதவிசெய்யலாம் என்ற ஆலோசனையை முன் வைக்கிறோம்.

மஹர்

திருமணத்தில் மணமகன், மணமகளுக்கு வழங்கும் விவாக அன்பளிப்பையே மஹர், ஸதாக் என்று சொல்லப்படும். இது அவசியமானதாகும்.

பெரிதும் பேண வேண்டிய அவசியமான இந்த அன்பளிப்பு வெறுமனே சடங்காக்கப்பட்டு, பல லட்சங்களை வரதட்சணையாக வாங்குவோர் சில ஆயிரங்களை, (சில இடங்களில் அதைவிடக் குறைவாக) மட்டுமே மஹராக வழங்கி, வாங்கும் வரதட்சனையை விட்டுவிட்டு, வழங்கும் மஹரை மட்டுமே நிகாஹ் பதிவேட்டில் பதிவு செய்து ஒலி பெருக்கியிலும் முழங்குவார்கள். ஆனால் மஹர் வழங்குவதன் அவசியத்தையும், அகமியத்தையும் குர்ஆன் ஹதீஸ் ஒளியில் பார்ப்போம்.

وَآتُوا النِّسَاءَ صَدُقَاتِهِنَّ نِحْلَةً

மேலும் பெண்களுக்கு அவர்களுக்குரிய மஹ்ரை

மனமுவந்து அளித்து விடுங்கள். (அந்நிஸா - 4)

وَآتَيْتُمْ اِحْدَاهُنَّ قِنْطَارًا فَلَا تَأْخُذُوْا مِنْهُ شَيْئًا

நீங்கள் அவர்களில் ஒருத்திக்கு செல்வக் குவியலையே (மஹ்ராகக்) கொடுத்திருந்தாலும் கூட, அதிலிருந்து எதனையும் நீங்கள் (திரும்ப) எடுத்துக் கொள்ளாதீர்கள். (அந்நிஸா 20)

மேற்கண்ட இறை வசனங்களின் வழியே மஹ்ர் வழங்குவது அவசியமென்பதையும், அது செல்வக்குவியலாகக் கூட இருக்கலாம் அதற்கு அளவுகள் கிடையாது என்பதையும் அறிய முடிகிறது.

ஒருமுறை திரு நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் திரு முன்னில் ஒரு பெண் வந்து என்னை தங்களுக்கு அன்பளிப்பாக வழங்கி விட்டேன். தங்கள் விருப்பப்படி செய்து கொள்ளுங்கள் என்றாள். நபியவர்கள் பதில் எதுவும் கூறவில்லை.

மீண்டும், மீண்டும் இப்பெண் மூன்று முறை இதைச் சொன்ன போது, ஒரு மனிதர் எழுந்தார். அல்லாஹ்வின் தூதரே இவரை எனக்கு மண முடித்து வையுங்கள் என்று கூறினார்.

நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள், (இவருக்கு மஹ்ராகக் கொடுக்க) உம்மிடம் ஏதேனும் பொருள் உள்ளதா? என்று கேட்டார்கள்.

அவர் இல்லை என்று கூறினார்.

நபி ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள், “நீர்

சென்று (இவருக்கு மஹ்ராகக் கொடுக்க) இரும்பினாலான ஒரு மாதிரத்தையேனும் தேடுக" என்றார்கள். அவர் போய்த் தடிவிட்டு பிறகு வந்து, ஏதும் கிடைக்கவில்லை. இரும்பாலான மாதிரம் கூட கிடைக்கவில்லை என்று சொன்னார்.

அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், குர்ஆனில் ஏதேனும் உம்முடன் (மனனமாக) உள்ளதா" என்று கட்டார்கள். அதற்கவர் " ஆம் இன்ன அத்தியாயம், இன்ன அத்தியாயம் என்னிடம் (மனப்பாடமாக) உள்ளது" என்றார்.

அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், உம்முடன் (மனனமாய்) உள்ள குர்ஆன் அத்தியாயங்களுக்காக இவளை உமக்கு மணமுடித்துத் தந்தேன். நீர் செல்லலாம் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் - ஸஹ்ல்பின் சஅத் ரலியல்லாஹு அன்ஹு
புகாரி ஷரீப் 5149

ஹழ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு பேரிச்சங்கொட்டையின் எடையளவு தங்கத்தை மஹ்ராகக்) கொடுத்து ஒரு அன்சாரிப் பெண்ணை மணமுடித்துக் கொண்டார்கள்.

அறிவிப்பாளர்: அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்
(நூல் - புகாரி ஷரீப் 5148)

வலீமா

திருமண விழாக்களில் விருந்துகளுக்கு பஞ்சம் இருக்காது. என்ன செலவானாலும் தம் கௌரவத்தைக் காக்க

வேண்டும் என்ற வீர முனைப்போடு பணத்தை வாரி இறைத்து விருந்து நடத்தப்படும்.

உறவினர்களிலும் தம் பொருளாதார நிலைக்கு நிகரானவர்கள், தம்மை விட உயர்ந்த, தம் நிலையிலே உள்ள செல்வந்தர்கள், தொழிலதிபர்கள் அரசியல் பிரமுகர்கள் மற்றும் சிலர் என்று பட்டியலிட்டு அழைப்பிதழ் வழங்கி வெகுவான உபசரிப்புகளோடு விருந்து விழா அரங்கேறும்.

ஆனால், அங்கே உறவினர்களில் பலருக்கு அழைப்பே இருக்காது, அண்டை வீட்டார்களில் ஏழைகள் மறந்தும் கூட நினைவுக்கு வராமல் பார்த்துக் கொள்வார்கள். அதையும் மீறி விருந்து அறைக்கு வரும் ஏழை, எளியவர்கள் வாசலிலேயே நிறுத்தப்படுவர். உண்டது போக எஞ்சிய எச்சி இலைகள் அவர்களுக்கு வீசி எறியப்படும்.

இவ்வளவும் எங்கே என்று கேட்கிறீர்களா? சில முஸ்லிம்களின் திருமணவிழாக்களில் தான். ஆச்சரியமே.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ رَسُوْلُ اللّٰه صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ: شَرُّ الطَّعَامِ طَعَامُ الْوَلِيْمَةِ يُدْعَى لَهَا الأَغْنِيَاءُ وَيُتْرَكُ الْفُقَرَاءُ

விருந்துகளில் கெட்ட விருந்து செல்வந்தர்கள் அழைக்கப்பட்டு ஏழைகள் வி(ரட்)டப்படுகின்ற வலீமா விருந்து என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

நவின்றார்கள்.

அறிவிப்பாளர் - அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு

நூல் - மிஷ்காத்

'வலீமா' என்பது திருமணத்திற்குப்பின் அதுவும் மணமக்களின் தனிமைக்குப் பின் மணமகன் வீட்டால் வழங்கப்படும் விருந்தாகும்.

இது குறித்த நபிகளின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்வொன்றைக் காண்போம்

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்

அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் ரலியல்லாஹு அன்ஹு தம் மீது (வாசனைத் திரவியத்தின்) மஞ்சள் நிற அடையாளமிருக்க, அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தார்கள்.

அப்போது (அதுகுறித்து) அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வினவியபோது, தாம் ஒரு அன்சாரிப் பெண்ணை மணமுடித்துக் கொண்டதாக நபியவர்களிடம் கூறினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு மஹர் செலுத்தினீர்" என்றார்கள்.

அதற்கு அப்துர்ராஹ்மான் பின் அவ்ப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "ஒரு பேரிச்சங்கொட்டையின் எடையளவு தங்கத்தை" என்று பதிலளித்தார்கள். அல்லாஹ்வின் தூதர்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் “ ஒரு ஆட்டையாவது (அறுத்து) வலீமா மணவிருந்து அளிப்பீராக என்று கூறினார்கள்.

நூல் புகாரி ஷரீப் 5153

அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அன்னை ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ரலியல்லாஹு அன்ஹா அவர்களை மணமுடித்தபோது முஸ்லிம்களுக்கு நல்ல, விசாலமான விருந்து கொடுத்தார்கள் என அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கிறார்கள்

நூல் - புகாரி ஷரீப் 5154

அழைப்பும் – மறுப்பும்

திருமணம் என்ற சுன்னத்தான நிகழ்வில் நடைபெறும் சுன்னத்தான விருந்து ‘வலீமா’. ஆனால் அதிலும் கூட பலர் தங்களது பழைய பகைமையைப் பேசி விருந்து அழைப்பை மறுக்கின்றனர்.

இந்த இனிய விழாவை முன் வைத்தாவது குடும்ப உறவு மலரட்டுமே என்று பாராமல் தமது குடும்பப் பிரச்சனைகளை தம் வாரிசுகளுக்கும் விட்டுச் செல்கின்றனர்.

விருந்துக்கு அழைத்தும் மறுத்தவரைக் குறித்து மாநபியவர்கள்,

وَمَنْ تَرَكَ الدَّعْوَةَ فَقَدْ عَصَى اللّٰهَ وَرَسُوْلَهُ

அவர் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் மாறு செய்து விட்டார் என்றார்கள். (நூல் - மிஷ்காத்)

மணமக்களை வாழ்த்தி

மணவிழா மேடைகளில் தம்பதியரை வாழ்த்தி அறிஞர் பெருமக்களும், அரசியல் பிரமுகர்களும் அருவி நடை சொல்லெடுத்து அழகு தமிழில் பேசும் நாவலர்களும், பாவலர்களும் வாழ்த்துரை வழங்குவர்.

ஆனால் யாரும் சொல்லாத, சொல்ல முடியாத வகையில் அருமை நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள தன் வாழ்வு நெறி பேழையையே பரிசளித்து, என்போன்றும், என் மனைவியரிடையே நான் நடந்தது போன்றும் வாழுங்கள் என வாழ்த்தியிருக்கிறார்கள்.

அருள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,ஆன்மீகப் பேரரசராக, போர்படைத் தளபதியாக, சமூகத்தை கட்டுக் கோப்புடன் அழைத்துச் செல்கிற பொறுப்புள்ள தலைவராக, நீதிபதியாக இன்னும் பல்வேறு பொதுப்பணிகளிலும், சமூகசீர்திருத்தங்களிலும் ஈடுபட்டிருந்த போதிலும், அவைகளில் எதிலுமே குறை வைக்காததைப் போன்றே, நல்ல கணவர் என்ற தகுதியிலும் எதிரிகளால் கூட குறைச் சொல்ல முடியாத நிறை வாழ்வு கண்டார்கள்.

தனக்கென்று இறைவனளித்த தனித் தன்மையின் படி பதினொன்று மனைவியரிடம் வாழ்ந்து வழி காட்டிய வள்ளல் நபியவர்கள், ஒரேகாலத்தில் ஒன்றுக்கு மேற்பட்டு ஒன்பது

மனைவியருடன் வாழ்ந்த போதும், அவரவர் தகுதிக்கேற்ப நீதி உரிமை இவைகளில் சிறப்பான செங்கோலோச்சியுள்ளார்கள். மனைவிகளில் ஆயிஷா நாயகியுடன் ஓட்டப்பந்தயம் நடத்தியிருக்கிறார்கள். குளியலறையில் இருவரும் இணைந்து குளிக்கையிலே, குவளையை பிடுங்கி வைத்துக் கொண்டு விளையாடி இருக்கிறார்கள். அவர்களின் வாயில் இருக்கும் மாமிசத் துண்டை தன் வாயினாலேயே கடித்து எடுத்திருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் வாழ்ந்து தன் மனைவியர்களுக்கு செய்ய வேண்டிய மகத்தான கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். எனவே தான், இப்படிச் சொன்னார்கள்

خَيْرُكُمْ خَيْرُكُمْ لأَهْلِهِ وَأَنَا خَيْرُكُمْ لأَهْلِي

உங்களில் சிறந்தவர், உங்கள் மனைவியர்களிடம் சிறந்தவரே இன்னும் நான் உங்களில் சிறந்தவன் ஏனெனில் என் மனைவியர்களிடம் நான் சிறந்தவன். என்றார்கள்.

எனவே அருள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போதித்த வாழ்வு நெறியின் பொருள் புரிந்து வாழ வேண்டும்.

மணமக்களுக்கு மாநபியின் (துஆ) சோபனம்

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللّٰهُ عَنْهُ قَالَ قَالَ رَسُوْلُ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ: رَحِمَ اللّٰهُ رَجُلاً قَامَ مِنَ اللَّيْلِ فَصَلَّى وَأَيْقَظَ إِمْرَأَتَهُ فَإِنْ أَبَتْ نَضَحَ فِي وَجْهِهَا الْمَاءَ وَرَحِمَ اللّٰهُ امْرَأَةً قَامَتْ مِنَ اللَّيْلِ فَصَلَّتْ وَأَيْقَظَتْ زَوْجَهَا فَإِنْ أَبَى نَضَحَتْ فِيْ وَجْهِهِ الْمَاءَ

ஒரு மனிதருக்கு அல்லாஹ் அருள் புரிவானாக, அவர் இரவில் எழுந்து தொழுவார், அவர் மனைவியையும் தூக்கத்திலிருந்து எழுப்புவார். அவள் மறுத்தால் அவள் முகத்தில் தண்ணீரைத்தெளிப்பார்

இன்னும் ஒரு பெண், அவள் இரவில் எழுந்து தொழுவாள், அவள் கணவரையும் தூக்கத்திலிருந்து எழுப்புவாள். அவர் மறுத்தால் அவர் முகத்தில் தண்ணீரைத்தெளிப்பாள்.அந்தப் பெண்ணுக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக

நூல் - அபூதாவூத் ஷரீப்

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

எவரேனும் திருமணம் செய்தால் அவர்களை வாழ்த்தும் முகமாக அருள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்

ارَكَ اللّٰهُ لَكَ وَبَارَكَ عَلَيْكَ وَجَمَعَ بَيْنَكُمَا فِي خَيْرٍ

பாரக்கல்லாஹு லக வபாரக அலைக்க வ ஜமஅ பய்னகுமா ஃபீ khகைரின்

அல்லாஹ் உனக்கு அருள் வளத்தை அளிப்பானாக, இன்னும் அருட்பேற்றை உன் மீது பொழிவானாக! இன்னும் நல்லவைகளில் உங்கள் இருவரையும் ஒன்று சேர்த்து வைப்பானாக, என்று வாழ்த்தி துஆ செய்வார்கள்.

நூல் - திர்மிதிஷரீப்

மேலும், நம்மில் வழக்கமாக ஓதப்பட்டு வரும் துஆவை அதாவது நபிமார்களில் சிலரின் பெயர்களைச் சொல்லி அவர்களையும் அவர்களின் மனைவியர்களையும் போல இறைவா இவர்களை இணைத்து வை என்ற அந்த துஆவை ஓதிவருவது அருள்பெற்ற நம் ஆன்றோர்களின் நடைமுறையாகும். எனவே அவசியம் அதையும் ஓத வேண்டும்.

அருள் மறைக்குர்ஆனின் நெறிநின்று, அண்ணல் நபியின் வழி சென்றால் வாழ்வு வளம் பெறும். இல்லறம் நல்லறமாய் அமையும் திருமணம் நறுமணமாகும்.

அல்லாஹ் அருள்புரிவானாக ஆமீன

கணவன் - மனைவி

கடமைகளும் - உரிமைகளும்

வாழ்க்கைப் புத்தகத்தில் முக்கியமான அத்தியாயம் இது. சிலர் இந்தப்பக்கங்களை புரட்டுவதே இல்லை. இன்னும் சிலரோ இதன் ஒரு புறத்தை மட்டுமே நினைவில் வைத்து, மறுபுறத்தை மறந்துவிட்டனர். இப்படியாக இந்தப்பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

சிறிய ஒரு கிராமத்திலே ஒரு குடிசை வீட்டிலே தம்பதியரிடையே ஏற்பட்ட சிறு தகராறு, ஊதி பெரிதாக்கப்பட்டு. ஊரையே சண்டைகளமாக மாற்றிவிட்ட கசப்பான அனுபவங்களும் கூட நம்மில் இல்லாமல் இல்லை.

ஊடல்

தம்பதியர்களிடையே 'ஊடல்' என்பது உணவிலே உப்பைப் போல. உணவுக்கு இன்னும் சுவை கூட்டும் சாதனமாகும். அதுவே அதிகரித்துவிட்டால், உப்பு கூடிவிட்ட உணவைப் போல், ஊடல் கூடிவிட்ட உறவுகளும் வீட்டை விட்டு வெளியேறிவிடும் அபாயமே நேரிடும்.

எனவே தான் எதற்கும் வழிகாட்டிய ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், இதற்கும் அழகிய வழியை அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

புரிந்து கொள்ளுதல்

உலகில் எங்கோ பிறந்த ஆண்மகனையும், எங்கோ பிறந்த பெண்மகளையும் 'மணபந்தம்' கணவன் - மனைவி என

இணைத்து வைக்கிறது.

எனவேதான் முதலில் இருவரும் தம்மை ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டும். பிறகு ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும். உள்ளங்களைப் பரிமாறிக்கொள்ள வேண்டும் பார்வைகளின் ஸ்பரிசங்களினால் பேசிக்கொள்ளவும் வேண்டும்.

அறிமுகம்

கணவன், மனைவி என்ற உறவை உயர்மறைக் குர்ஆனின் உவமை நயத்தில் உரசிப்பார்த்தால், வல்லோன் அல்லாஹ் வான்மறையில்

هُنَّ لِبَاسٌ لَّكُمْ وَأَنْتُمْ لِبَاسٌ لَّهُنَّ

அவர்கள் (பெண்கள்) உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள். (அல்பகரா - 187) என்றுரைக்கிறான்.

நீண்ட ஒரு வசனத்தின் ஒரு சிறுபகுதியான இவ்வசனத்தின் வழியே கணவன், மனைவி என்ற உறவுக்கு உரமிடுகிறான் இறைவன். கணவன், மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் ஆடையாக இருக்கிறார்கள் என்பதன் மூலம் இருவரையும் சமப்படுத்தியே சொல்கிறான். ஒருவரின்றி ஒருவரில்லை என்ற உயர்ந்த தத்துவத்தின் மூலம் யார் பெரியவன்? என்ற கேள்வியே நிர்மூலமாகி விடுகிறது.

குடும்பத்தின் நிர்வாகம், கண்டிப்பு, ஆளுகை இவைகளெல்லாம் கணவனின் கடமைகளில் உட்பட்டதெனினும் அதற்கு ஒத்துழைப்பு, ஆர்வமூட்டுதல் போன்ற மனைவியின்

பின்பலம் அவசியப்படுகிறது. எனவே குடும்பத்தின் எழுச்சிக்கும், வீழ்ச்சிக்கும், இருவரின் கடமைகளும், உரிமைகளும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

கணவனின் கடமைகள்

நான் கணவன், எனவே எதை வேண்டுமானாலும் செய்வேன். அதைக் கேட்கவோ, என் கருத்தை நிராகரிக்கவோ கூடாது, என்ற முரட்டு பிடிவாதம் ஒரு மனிதனின் இதயத்தில் ஊடுறுவினால், அந்தக் குடும்பம் கல் விழுந்த கண்ணாடி போல் ஆகி விடும்.

ஒரு இரவு முழுவதும் இறைவழிபாட்டிலேயே இருக்க விரும்பிய நபிகள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தன் அன்பு மனைவி ஆயிஷா நாயகியிடம் அனுமதி கேட்டார்கள் என்ற வரலாறு, நமக்கு படிப்பினை மிக்கதாகும்.

அல்லாஹ்வின் தூதர், அகில உலகத்தின் தலைவர் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அல்லாஹ்வை வணங்க ஆயிஷா நாயகியிடம் ஏன் அனுமதி கேட்க வேண்டும்?

அந்த இரவு அவர்களுடையது, எனவே அவர்களின் உரிமையைப் பறித்து விட்டு இறைவழிபாட்டில் ஈடுபடுவதை இறைவனே விரும்ப மாட்டான் என்பதாலேயாகும்.

மனைவியின் உரிமைகளை பறித்து விட்டு இறைவழிபாடு செய்வதைக் கூட இஸ்லாம் அங்கீகரிக்காத போது, மற்றவைகளை எப்படி அனுமதிக்கும். எனவே மனைவியின்

உரிமை என்பது மகத்தானது. அவள் விட்டுக்கொடுத்தாலே யொழிய அதைப்பறிக்க முடியாது.

இஸ்லாத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் பலப்பரிட்சையாக நடைப்பெற்ற பத்ருகளத்தில், எதிரிகளிடம் ஆயுதபலம், பொருளாதார வசதிகள், வீரர்களின் எண்ணிக்கை என எல்லாவகைகளிலும் எதிரிகள்பயமுறுத்தி நின்ற வேளையில், இஸ்லாமிய (வீர)ர்களின் எண்ணிக்கையோ மிகக்குறைவு.

அந்த நிலையிலும் கூட அருமை ஸஹாபி உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை போருக்கு வர பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அனுமதிக்க வில்லை. காரணம் உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மனைவி ருகையா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் சுகவீனமாக இருந்தார்கள்.

வீட்டிலே மனைவி வியாதியாக இருக்கும் போது அவர்களை கவனிப்பதே கணவனின் கடன் என்பதை உணர்த்தவே, நபியவர்கள் இறைப்பாதையான போருக்கே வரவிடாமல் தடுத்தார்கள்.

உபதேசம்

அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது அரபா பெருவெளியில் தமது 'கஸ்வா' எனும் ஒட்டகத்தின் மீதிருந்தவாறு உபதேசம் செய்தார்கள்.

யுக முடிவுநாள் வரை வரவிருக்கும் மனிதர்களுக்கான

அந்த உபதேச உரை, பல்லாயிரக் கருத்துக்களை உள்ளடக்கிய தலைப்புச் செய்தியாக இருந்தது. அந்தப் பேருரையில்

أَلاَ إِنَّ لَكُمْ عَلَى نِسَائِكُمْ حَقًّا وَلِنِسَائِكُمْ عَلَيْكُمْ حَقًّا

"மக்களே கேளுங்கள். உங்கள் மனைவியரிடம் நீங்கள் உரிமைகளை எதிர்பார்ப்பது போன்று, உங்களுக்கும் அவர்கள் மீது உரிமைகள் உண்டு" என உபதேசித்தார்கள்.

நூல் - திர்மிதி ஷரீப்

சுருக்கமான, உருக்கமான கருத்துச் செறிவு மிக்க அந்த உயரிய உரையில், கணவன் - மனைவியின் உரிமைகளையும் உள்ளடக்கியதன் மூலம் அந்தச் செய்திகள் எந்தளவு வாழ்வில் பேணப்பட வேண்டும் என்பதை நினைவில் நிறுத்த வேண்டும்.

குறை - நிறை

குறை - நிறை என்பது வாழ்க்கையில் சகஜம். அதிலும் கோணலான விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்ட பெண்களிடம் குறைகளுக்கு குறைவிருக்காது. ஆனால் அதைத் திருத்துவதிலும், எளிய அணுகுமுறை தேவை என்பதை பின்வரும் நபிமொழியின் வழியே விளங்குவோம்.

பெண்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். என உங்களுக்கு நான் உபதேசிப்பதை ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் பெண்கள் (வளைந்த) விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டுள்ளனர். விலா எலும்பின் மிகக் கோணலான பகுதி அதன் மேல் பகுதியாகும். அதை நீ (பலவந்தமாக)

நிமிர்த்திக்கொண்டே போனால், அதை நீ ஒடித்தே விடுவாய், அதை அப்படியே நீ விட்டுவிட்டால் கோணலுள்ளதாகவே அது நீடிக்கும். ஆகவே பெண்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்.

அறிவிப்பாளர் - அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு

நூல் - புகாரிஷரீப் - 5186

மேற்கண்ட ஹதீஸின் வழியே பெண்களின் இயல்பு நிலையையும் அதை அணுக வேண்டிய முறையையும் போதித்த நபியவர்கள் அதற்கும் சில வழிமுறைகளை வகுத்தளித்தார்கள்.

நீங்கள் உண்ணும் போது அவளையும் உண்ணச் செய்யுங்கள். உடை வாங்கும் போது அவளுக்கும் உடை வாங்கிக் கொடுங்கள். அவளது முகத்தில் அடிக்காதீர்கள். அவளைச்சபிக்காதீர்கள். அவளுடன் தொடர்பை விட்டுவிட நேர்ந்தால், வீட்டில் மட்டும் விடுங்கள்.

அறிவிப்பாளர் - ஹகீம் பின் முஆவியா ரலியல்லாஹு அன்ஹு

நூல் - அபூதாவூத் ஷரீப்

ஒரு முஃமினான கணவன், தன் முஃமினான மனைவியை வெறுக்க வேண்டாம். அவளுடைய ஒரு பழக்கம் அவனுக்கு பிடிக்கவில்லையென்றால் அவளுடைய வேறு பழக்கங்கள் அவனுக்கு மன நிறைவு அளிக்கக்கூடும்.

நூல் - முஸ்லிம் ஷரீப்

இதுபோன்ற இன்னும் பல எழில் மொழிகள் கணவன்

மனைவிக்குச் செய்ய வேண்டிய உரிமைகளையும், கடமைகளையும் விளக்குகிறது.

ஆலோசனை

மனைவி வாழ்க்கையின் துணைவி, துணைமட்டுமல்ல இணையும் கூட. எனவே நம் காரியங்களை மனைவியிடம் பரிமாறிக் கொள்வதிலும், அவசியப்பட்டால் ஆலோசனை கேட்பதிலும் ஆர்வம் காட்ட வேண்டும். அவள் வழங்கும் ஆலோசனைகள் முறையாக இருக்கும் பட்சத்தில் அதை ஏற்றுக் கொள்வதில் யோசிக்கத் தேவையில்லை.

ஹுதைபியாவில்

அருள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உம்ராவிற்காக புனித மக்காவிற்கு வரும் வழியில் 'ஹுதைபியா' எனும் இடத்தில் நிறுத்தப்பட்டு மீண்டும் மதீனாவிற்கே திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

வெளிப்பார்வையில் ஏதோ பயணம் முற்றுப் பெறாமல் தோல்வி ஏற்பட்டது போன்ற தோற்றம் உருவானாலும் அதன் அந்தரங்கத்தை தன் தூர நோக்குப்பார்வையால் கணித்து விட்ட கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தம் தோழர்கள் கொண்டு வந்த 'குர்பானி' பிராணிகளை அங்கேயே அறுத்துப்பலியிட்டு, முடிகளை மழித்துக் கெள்ளுமாறு கூறினார்கள்.

ஆனால் அருமைத் தோழர்களில் யாரும் அதை நடை முறைப்படுத்தவில்லை. இதனால் கவலையுற்ற அன்னை உம்முசலமா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்கள், அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு

ஆலோசனையை முன் வைத்தார்கள்.

நாயகமே, முதலில் நீங்கள் முடியை மழியுங்கள் பிறகு அவர்கள் முடியை மழிப்பார்கள் என்ற போது, அதை ஏற்றுக் கொண்ட நபியவர்கள், செயல் படுத்தினார்கள். அதைத் தொடர்ந்து தோழர்களும் முடிகளை மழித்துக் கொண்டனர்.

இதுதான் அதற்கு சரியான தீர்வு என்பது முக்காலத்தையும் உணர்ந்த முத்து நபியவர்களுக்கு தெரியாததல்ல. ஆனால் தக்க சமயத்தில் சரியான ஆலோசனை சொல்கிற வகையில் மனைவியை பக்குவப்படுத்தி வைத்தார்கள்.

இந்த நிகழ்வின் வழியே மனைவியிடம் ஆலோசனை பெறுவதையும் அதை நிறை வேற்றுவதன் முறைகளையும் அறிய முடிகிறது.

இது போன்ற நிகழ்வுகளின் மூலம் கணவன், மனைவிக்கு செய்ய வேண்டிய உரிமைகளை அறியவும், புரியவும் முடிகிறது.

மனைவியின் கடமைகள்

'மனைக்குத் தலைவி மனைவி' என்பார்கள். அந்த மனையின் மகிழ்ச்சியே அவளிடம் தான் உள்ளது.

எவ்வளவு தான் பொறுப்புடன் நடந்தாலும், எப்பவாவது நிகழ்ந்துவிடும் குறையையே சுட்டிக்காட்டும் கணவன், ஓடி ஆடி, வேலைசெய்து ஓடாகிபோனாலும் குறையை மட்டுமே கூர்ந்து கவனிக்கும் மாமியார், நல்லது செய்வதுபோல் நடித்து நாடகம் ஆடும் நாத்தனார்கள். இவர்களுக்கு மத்தியிலெல்லாம் ஒரு பெண் நல்ல மனைவியாக, பொறுப்புள்ள மருமகளாக நடப்பது கத்தி மேல் நடப்பது போலத்தான்.

அத்தனைக்கும் மத்தியில் ஒரு பெண் தன் உயர்ந்த ஒழுக்க நடைமுறைகளாலும், பண்பார்ந்த பணிவிடைகளாலும், சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல் போன்ற குணாதிசியங்களாலும் புக்ககத்தில் தன் பிறந்தகதின் பெருமையை நிலைநாட்டி விட்டால் அந்த குடும்பத்தில் கரை புரண்டோடும் மகிழ்ச்சிக்கு அணைபோட முடியாது.

அத்தனையும் அந்தப் பெண்ணை சார்ந்தே இருக்கிறது. அந்த வகையில் ஒரு பெண் தன்னை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டுமெனில் மாநபியின் அறிவுரைகளை தன் வாழ்வில் நடைமுறைக்கு கொண்டு வருதலே எளிய வழியாகும்.

அருள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருச்சபைக்கு ஒரு பெண் வந்து, தன் கணவர் ஸப்வான் பின் முஅத்தில் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பற்றி சில புகார்களை கூறினார்கள்.

1) நான் தொழுதால் என்னை அடிக்கிறார்

2) நான் நோன்பு நோற்றால் அதை முறித்துவிடச் சொல்கிறார்.

3) அவர் சூரியன் உதயமாகும் வரை சுபுஹ் தொழாதிருக்கிறார்.

என்று தன்கணவரைப் பற்றி முறையிட்டார்கள்.

அவ்வமயம் அவையிலே இருந்த அந்த நபித்தோழரிடம் அது குறித்து, அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விளக்கம் கேட்டார்கள். அந்த ஸஹாபி கூறிய பதில்

1) அவள் தொழுகையில் இரண்டு அத்தியாயங்கள் ஓதி தொழுகிறாள் அதனால் தான் நான் தடுத்தேன்.

2) அவள் எப்பொழுதும் நோன்பிருக்கிறாள். நானோ வாலிபனாக இருக்கிறேன். என்னால் பொறுமையாக இருக்க முடிவதில்லை.

3) 'சூரியன் உதயமாகாத வரை கண் விழிக்க முடியாதவர்கள்' என்று (எல்லோராலும்) அறியப்பட்டக் குடும்பத்தைச் சார்ந்தவன் நான்.

இதுதான் உண்மை என பதிலளித்தார்கள்.

இப்போது பெருமானார் பேசுகிறார்கள்

அப்பெண்ணை நோக்கி,

1) தொழுகையில் ஒரு அத்தியாயம் ஓதுவது போதுமானதாகும்.

2) எந்தப் பெண்ணும் தன் கணவனின் அனுமதியின்றி (நஃபிலான) நோன்பு நோற்கக் கூடாது.

3) (அவரை நோக்கி) நீர் கண் விழிக்கும் போது தொழுது கொள்ளும் என்றார்கள்.

மேற்கண்ட நிகழ்வு அபூதாவூத் எனும் கிரந்தத்தில் பதிவு பெற்றிருக்கிறது.

இந்த நீண்ட நிகழ்வின் நிழலில் பல உண்மைகள் பளிச்சிடுகிறது.

தனது கணவனின் குறையை மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கூறினால் தீர்வு கிடைக்கும் என்றெண்ணிய அப்பெண்ணின் தளராத உறுதி.

தன் குறையை பிறரிடம் கூறுகிறாளே என நாணமோ, கோபமோ அடையாமல் தன் மனைவியின் கேள்விக்கு தக்க பதில் கூறியபோங்கு.

இப்படியொரு பெண், குறை முறையீடு செய்யும் போது அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் குற்றம் சுமத்தப்பட்டவரிடம் நேரடியாகவே வினவி விபரம் தெரிந்த பின் தீர்வு சொல்லிய அருமை நபியின் பெருமை மிகு வழிமுறை.

இந்த நிகழ்வில் கணவன், மனைவி மட்டுமில்லாமல், சமுதாயத்தின் தலைவர்களாகவும், ஆலிம்களாகவும், தீர்வு சொல்லும் பொறுப்புள்ளவர்களாகவும் திகழும் யாவருக்கும் படிப்பினை நிறைந்திருக்கிறது.

நாம் இந்த நிகழ்வை எடுத்து வந்த நோக்கம் மனைவி கணவனுக்கு செய்ய வேண்டிய கடமை, உரிமைகளை பேணுவதில் இஸ்லாம் எந்த அளவு கவனம் செலுத்துகிறது என்பதை கவனிப்பதே.

தொழுகை, நோன்பு இவையிரண்டுமே இறைவனோடு அடியானை மிக நெருக்கி வைக்கும் வணக்க வழிபாடுகளாகும். ஆனால் அதில் கூட கணவனின் உரிமை பாதிக்காமல் திகழ வேண்டும் என்பதே இஸ்லாம் விதித்த இனிய நியதியாகும்.

இன்னொரு முறை நபிகளிடம்,

நாயகமே சேமிப்புகளில் சிறந்த பொருள் எது? என வினவிய போது

1) இறைவனை நினைவு கூறும் நாவு

2) இறைவனுக்கு நன்றி செலுத்தும் உள்ளம்

3) இறைவழியில் நடத்திட தன் கணவனுக்கு உதவிடும் முஃமினான மனைவி என்றார்கள்.

நூல் - திர்மிதிஷரீப்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்

மக்களில் யாருக்காவது ஸஜ்தா செய்யுமாறு நான் கட்டளையிடுபவனாக இருந்தால், மனைவியை தன் கணவனுக்கு ஸஜ்தா செய்யுமாறு ஏவியிருப்பேன்.

நூல் - திர்மிதி ஷரீப்.

நல்லபெண்

சிறந்த பெண் யார்? என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்ட போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பதிலளித்தார்கள்.

"கணவன் தன்னைப்பார்த்தால் அவள், அவனை மகிழ்விப்பாள். அவன் கட்டளையிட்டால் கீழ் பணிந்து நடப்பாள். அவள் கற்பிலும், பொருளிலும் அவன் விரும்பாததை செய்யமாட்டாள்" என்றார்கள் நூல் - நஸயீஷரீப்

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றார்கள்

ஒரு மனிதன் தன் மனைவியைத் தன் தேவைக்காக அழைத்தால், அவள் அடுப்பின் அருகில் (சமையலில்) இருந்தாலும் சரியே, அவள் அவனிடத்தில் வரட்டும்.

நூல் - திர்மிதிஷரீப்

அருள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்

என் உயிர் யார்வசம் உள்ளதோ அவன் மீது ஆணையாக ஒரு மனிதர் தன் மனைவியை தம் விரிப்பிற்கு அழைத்து அவள் வர மறுத்தால், வானவர்கள் அவளை சபித்துக் கொண்டே இருக்கிறார்கள். அ(கண)வர் அவளைப் பொருந்திக் கொள்ளும் வரை.

நூல் - புகாரிஷரீப், முஸ்லிம்ஷரீப்

சூரியக் கிரகணம் ஏற்பட்ட ஒருநாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கிரகணத் தொழுகை தொழுதார்கள்.

தொழுது முடித்தபின் சொன்னார்கள்.

தொழுகையில் நான் நரகத்தைக் கண்டேன், அதில் அதிகமாக பெண்களையே பார்த்தேன் என்றார்கள்.

மக்கள் ஏன்? அல்லாஹ்வின் தூதரே என்று கேட்டார்கள்

அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்கள், நிராகரிப்பே காரணம் என்றார்கள்.

அப்போது, " பெண்கள் அல்லாஹ்வையா நிராகரிக்கிறார் கள்"? என வினவப்பட்டது. அதற்கு "கணவன் மார்களை நிராகரி(த்து நிந்தி)க்கிறார்கள். (கணவன் செய்த) உதவிகளுக்கு நன்றி காட்ட மறுக்கிறார்கள். காலமெல்லாம் ஒருத்திக்கு நீ உதவி செய்து, பிறகு உன்னிடம் ஏதேனும் (குறை) ஒன்றை அவள் கண்டால் 'உன்னிடமிருந்து எந்த நலனையும் நான் கண்டதேயில்லை' என்று சொல்லிவிடுவாள்" என பதிலளித்தார்கள்.

நூல் - புகாரிஷரீப் 5197

இன்னும் இதுபோன்ற ஏராளமான எழில் நபியின் மணிமொழிகள் மனைவிகள், கணவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும் உரிமைகளையும், நன்றியுணர்வையும் எடுத்தோதுகிறது.

மாமியார், VS மருமகள்

கைபிடித்த கணவன் மீது நம்பிக்கை கொண்டு, பெற்றதாய், பேணிவளர்த்த தந்தை, உடன் பிறப்புகள், உறவுகள் என எல்லாவற்றையும் பிரிந்து தன் பிறந்தகத்திலிருந்து, புக்ககம் தேடி வருபவள் மருமகள்.

அப்படியானால் அவளை தன் இன்னொரு மகளாக ஏற்று அவளது தேவைகளையும், உணர்வுகளையும் புரிந்து கொண்டு அவளின் இன்னொரு தாயாக தன்னை இனம்காட்டி மகிழ்விக்க வேண்டியவள்தான் மாமியார்.

ஆனால், மருமகளை மறுகண்கொண்டுப் பார்ப்பதும், தன்

வீட்டு மொத்த வேலைப்பளுவையும் அவள் மீது சுமத்தி, அவளின் சுகத்திற்கும், சுதந்திரத்திற்கும் மொத்த விடை கொடுத்து அவளை படாத பாடுபடுத்தி விடுகின்றனர்சில மாமியார்கள்.

எவ்வளவுதான் தன் தேவைகளை நிறைவேற்றினாலும், மாமியாருக்கு கொடுப்பதைக்கண்டு மனப்பொருமல் கொண்டு தன் கணவனையும்,மாமியாரையும் பிரித்து விடும் மருமகள் களுக்கும் பஞ்சமில்லை.

காலையிலே வேலைக்குச் சென்று மாலை, வேளையிலே வீட்டிற்கு வந்தால்,இந்த இரண்டு யுத்தங்களுக்கும் இடையில் சிக்கிக் கொண்டு அவன் படுகிற நிலை அந்தோ பரிதாபம்.

இந்த நேரங்களில் அவன் எண்ணத்தில் முட்டி மோதும் எண்ண அலைகளுக்கு முன்னால் 'சுனாமி'யெல்லாம் எம்மாத்திரம்?

தன் மனைவிக்கு இழைக்கப்படும் இடையூறுகளை காண சகிக்காது தன் தாயை தட்டிக் கேட்டாலோ, அவ்வளவு தான் அந்தப் பெரியம்மாவின் பொக்கை வாயில் பொறிபறக்கும். ஆமாடா நேத்து வந்த மனைவிக்காக பெத்த தாயையே ஏசத்துவங்கிட்டியேடா பாவி என்று ஓலமிட்டு ஒப்பாரி வைக்கத்துவங்கி விடுவார்கள்.

என் புள்ளைய என்ன மயக்க மருந்து கொடுத்தாளோ? என்று மீண்டும் மருமகள் மீது பாய்வார்கள்.

அவங்கத்தான் அப்படி, நீயாவது கொஞ்சம் விட்டுக் கொடுக்கக் கூடாதா என்று மனைவியிடம் கேட்டாலோ

அவ்வளவுதான், மடைதிறந்த வெள்ளம் போல் அழுது ஆறாக பெருக்கெடுக்கத்துவங்கி விடுவாள்.

என்ன இருந்தாலும் உங்க அம்மாவுக்குத்தான் சோர்ந்து பேசுவீர்கள். எல்லாம் என் தலைவிதி, நான் எங்க அம்மா வீட்டிற்கு போகிறேன் என புலம்பவும், புறப்படவும் துவங்கி விடுவாள்.

இங்கே தான் அவன் நிதானப்பட வேண்டும். வீட்டிற்கு வெளியே வேடிக்கைப் பார்ப்பதற்கே சில வேலையில்லாத கூட்டங்கள் காத்துக் கொண்டிருக்கும்.

சாளரங்களின் வழியே இவன் அடிக்கடி எட்டிப்பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்.

இவன் என்ன முடிவெடுத்தாலும், அவர்களின் வாயிக்கு 'அவல்' கிடைத்தது போலத்தான், மென்று விடுவார்கள்.

'பாத்தியா அவன, பெத்தத்தாய மதிக்காத பய' என்று சிலரும் 'வெறும் பய, கட்டிய மனைவியை விட்டுட்டு கிழவிக்கு வக்காலத்து பேசுறான்' என்று சிலரும் அவனின் குடும்ப நிகழ்வு பற்றி பெண்கள் மத்தியிலும், ஒட்டல்களிலும், சலூன்களிலும் அமர்ந்து பேசிக்கொண்டிருப்போர் மத்தியிலும் பட்டிமன்றமே நடக்கும். இது இத்தனைக்கும் யார் காரணம ? என்று என்னிடம் கேட்டால், மாமியார் என்றோ, மருமகள் என்றோ சுருக்கமாக பதில் சொல்லி யாருடைய வயிற்றெரிச்சலையும் வாங்கிக் கொள்ள விரும்பவில்லை.

இது அவரவர்களும் தங்களிடமே பேசி முடிவெடுக்க வேண்டியதாகும்.